வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்

ந.க.எண்.1435/அ5/2026, நாள். .04.2026

பொருள் பள்ளிக் கல்வி - நபார்டு நிதி உதவியுடன் பேராசிரியர் அன்பழகனார் பள்ளி மேம்பாட்டுத்திட்டத்தின்கீழ் அரசுப் பள்ளிகளில் உட்கட்டமைப்பு பணிகளை மேற்கொள்ளுதல் - தேவைப் பட்டியல் கோருதல் - தொடர்பாக

பார்வை தமிழ்நாடு பள்ளிகல்வி இணை இயக்குநரின்(இடைநிலை) செயல்முறைகள் ந.க.எண்.020528/என்2/இ2/2026,

.....

பார்வையில் காணும் செயல்முறைகளில் நபார்டு வங்கி நிதி உதவியுடன் பேராசிரியர் அன்பழகனார் பள்ளி மேம்பாட்டுத்திட்டத்தின் கீழ் பள்ளிகளில் தேவையின் அடிப்படையில் கூடுதல் வகுப்பறை, ஆய்வகம், குடிநீர் வசதிகள் மற்றும் சுற்றுச்சுவர் அமைத்தல் ஆகிய உட்கட்டமைப்பு தேவைப்படும் பள்ளிகளின் விவரங்கள் கோரப்பட்டுள்ளது.

எனவே நபார்டு நிதி உதவியுடன் பேராசிரியர் அன்பழகனார் பள்ளி மேம்பாட்டுத்திட்டத்தின்கீழ் உட்கட்டமைப்பு வசதிகள் தேவையுள்ள பள்ளிகள் இணைப்பில் கொடுக்கப்பட்ட தேவைப்பட்டியலின்படி படிவங்களை பூர்த்தி செய்து 17.04.2026 மாலை 5.00 மணிக்குள் முதன்மைக் கல்வி அலுவலகத்தில் தனிநபர் மூலம் நேரில் சமர்ப்பிக்குமாறு அனைத்து தலைமையாசிரியர்களுக்கும் தெரிவிக்கலாகிறது.

குறிப்பு

- நடைமுறை விதிகளின்படி, தேவைக்கதிகமாக கோரக்கூடாது.
- கட்டுமானம் மேற்கொள்ள தெரிவு செய்யப்பட்டுள்ள இடம் முதனமைக்கல்வி அலுவலர் / பள்ளியின் பெயரில் இருக்க வேண்டும்.
- மேலும் பள்ளிக்கு பணிகள் ஒதுக்கீடு செய்யப்படும் நிலையில் உடனடியாக கட்டுமானம் மேற்கொள்ளும் நிலையில் இருக்க வேண்டும்.

இணைப்பு : படிவம் I,II,III மற்றும் IV

முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்.

பெறுநர் –

1. தலைமையாசிரியர்கள்,
அரசு உயர் / மேல்நிலைப் பள்ளிகள், வேலூர் மாவட்டம்.
(இவ்வலுவலக இணையதளம் மூலமாக)